**அரசுத்தேர்வுகள் இயக்ககம் – சென்னை–6**

ஃபெஞ்சல் புயலின் காரணமாக மதிப்பெண் சான்றிதழ்கள் இழந்த மாணவ / மாணவிகளுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்

**செய்திக்குறிப்பு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 03.12.2024 நாளிட்ட செய்தி வெளியீடு எண்:2110–ல் ஃபெஞ்சல் புயலின் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ள விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகளுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இம்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் 10–ஆம் வகுப்பு / 11–ஆம் வகுப்பு / 12–ஆம் வகுப்பு / ஆசிரியர் பட்டயத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகள் தங்களது மாவட்ட ஆட்சியரால் நடத்தப்படும் சிறப்பு முகாம்களில் விண்ணப்பிக்கலாம். மேலும், தங்கள் மாவட்டத்தில் உள்ள முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகம் / மாவட்ட அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

மேற்காண் விண்ணப்பங்களுக்கு கட்டணம் ஏதும் செலுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர்**

இடம்: சென்னை–6

நாள்: 09.12.2024

அரசுத்தேர்வுகள் இயக்ககம் – சென்னை–6

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 03.12.2024 நாளிட்ட செய்தி வெளியீடு எண்:2110–இன் படி ஃபெஞ்சல் புயலின் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ள மாவட்ட மாணாக்கர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவம்

**மாவட்டம் :**

| வ.எண் | தலைப்பு | விவரங்கள் |
|---|---|---|
| 1 | பெயர் :<br>(சான்றிதழில் ஆங்கிலத்தில் உள்ளவாறு) | |
| 2 | பிறந்த தேதி<br>(சான்றிதழில் உள்ளவாறு) | |
| 3 | வகுப்பு :<br>(10–ஆம் வகுப்பு / 11–ஆம் வகுப்பு / 12–ஆம் வகுப்பு / தொடக்கக்கல்விப் பட்டயத்தேர்வு | |
| 4 | பதிவெண்:<br>(மதிப்பெண் சான்றிதழ் நகல் இருப்பின் இத்துடன் இணைக்கவும்) | |
| 5 | தேர்வெழுதிய வருடம் / பருவம் | |
| 6 | படித்த பள்ளியின் பெயர்:<br>(பள்ளியின் முகவரியுடன்) | |
| 7 | தொலைபேசி / கைப்பேசி எண்: | |
| 8 | முழு வீட்டு முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண்: | |

குறிப்பு : புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவிகள், ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் இழந்திருப்பின் ஒவ்வொரு மதிப்பெண் சான்றிதழிற்கும் தனித்தனியே விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாள்:

இடம்: விண்ணப்பதாரர் கையொப்பம்